# 5.8 முழு பெலன்

**அறிக்கை:**
நாம் ஆவியால் நிறைந்திருக்கும்போது நம்மிடம் அதிக பெலன் இருக்கும்.

**வேத வசனம்:** பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். அப்போஸ்தலர் 1:8

**சத்தியம்:** நாம் தேவனுடைய பெலனுடன் வெற்றியுள்ள சீஷர்களாய் மாற ஆவியானவரால் நடத்தப்பட வேண்டும். நாம் பூமியெங்கும் அவருக்குச் சாட்சியாய் இருப்பதற்கு வேண்டிய பெலனைப் பெறுவதே அவருடைய சித்தம்.

## பாடக்குறிப்புகள்

- **தேவனுடைய சந்நிதானத்தை நெருங்கி அறிந்திருத்தல்** - *யோ. 7:37-39*
- **ஆவியானவரில் மகிழ்ச்சியோடும் பெலத்தோடும் இருப்பது** - *அப். 2:1-4, 2:43-47, 4:32-35, 10:44-46*
- **தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து முழுமையாகச் சுத்திகரிக்கப்பட** - *1 யோவான் 1:9*
- **தேவனுடைய வார்த்தைகள் உறுதிப்படுத்தப்படுவதற்கும் அறிவிக்கப்படுவதற்கும்** - *ஆதி.3:3-6, ஏசாயா 59:21, எபே.4:29*
- **தேவனுடைய உயிர்த்தெழுதலின் சக்தியை நாம் உணர்வதற்கும்** - *எபே. 1:19-21*

## வேதப்பகுதி
*அப்போஸ்தலர் 2*

## ஆர்வமூட்டும் வினாக்கள்
(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- தேவனை எப்படி நெருக்கமாக அறிய முடியும்?
- நாம் எவ்வாறு பெலனையும், மகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ள முடியும்?
- தேவ அன்பில் ஏன் வளர வேண்டும்? (2 பேதுரு 1)

### தேவனை அறிந்துகொள்ளுதலின் மூலம் வரும் பெலன்

தேவன் நமக்குக் கொடுத்தப் பெலத்தை நாம் பல வழிகளில் உணர முடியும். பெரும்பாலும் நாம் தேவனுடைய அன்பு நமக்குள் இருக்கும்போது அவருடைய தெய்வீகப் பெலனை உணர்கிறோம். இந்த அன்பே நம்மைப் பாதுகாப்பதுடன் நம்பிக்கையையும் தரும். எனவே தேவ அன்பு உடையவர்கள் பலவான்களாய் கருதப்படுவார்கள். குறிப்பிட்ட நேரத்தில் உனக்குக் கொடுத்தப் பெலத்தை நினைத்துப்பார். அதை உனக்கு பிடித்தவர்களிடம் அதனைப் பகிர்ந்துகொள்.

**சிந்திக்க:**
நாம் தேவனிடத்தில் எப்படி தனிப்பட்டமுறையில் நெருக்கமாக முடியும்?

______________________________

______________________________

**ஜெபம்:**
தேவன் தன்னை நெருக்கமாக அறிந்துகொள்ள நமக்குக்கொடுத்த அழைப்பிற்கு நன்றி சொல்ல ஒரு ஜெபத்தை எழுது.

______________________________

______________________________

**செயல்**
தேவன் தொலைவில் இல்லை. அவர் நமது நண்பர். நமது வெற்றியில் அவரைத் துதிக்க வேண்டும். பயத்தின் நேரத்தில் அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும்.